2025 அக்டோபர் மாதம் 30 – ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 17/2018

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW2 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – சுருளிநதி |
| தந்தை பெயர்: | செல்லையா |
| ஊர்: | கோட்டூர் |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | டெய்லர் |
| வயது : | 47 |

தேதி : 30.10.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியாவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1. | எனது ஆதார் அடையாள அட்டையின் ஒளிப்பதிவு நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) – **ம.சா.ஆ.11.** |

மனுதாரர் மனுவில் கோரியவாறு மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**</u>:–

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர்களை எனக்கு தெரியும். மனுதாரர்களும் நானும் ஒரே சேர்ந்தவர்கள். விபத்து சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் எனக்கு உறவினர் என்பதாலும், ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதாலும், மனுதார்களுக்கு அதிக நஷ்ட ஈடுத் தொகை கிடைக்க வேண்டும் என்பதற்காக சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவத்தை நான் நேரில் பார்த்திருந்தால் குற்றவியல் வழக்கில் என்னை கண்ணுற்ற சாட்சியாக விசாரித்திருப்பார்கள் என்றும், அவ்வாறு விசாரிக்காததால் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. நான் மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.10.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.30 18:47:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
30.10.2025